# இறைதூதன்

## Messenger of God


UNIVERSITY OF JAFFNA
09 DEC 1999
PERIODICALS DIVISION

**இம்மாதச் செய்தி**

சிவராத்திரி என்றால் மங்கள கரமான இரவு என்பதே பொருள் நாலு சினிமா பார்த்து இரவு முழுவதும் விழித்து இருப்பது சிவராத்திரியின் தத்துவம் அல்ல நம் எண்ணம் முழுவதும் இறைவ னோடு லயித்து தெய்வ சிந்தனை யோடு விழித்திருப்பது தான் சிவராத்திரி விழிப்பு நிலைக்கு பொருள்.

**செய்திக் கட்டுரை**

(3ம் பக்கம்)


சர்வமதப் பத்திரிகை

மாசி 1999

முரசு 11

மாதம் ஒரு முரசு

விலை ரூபா 10/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாம் கடவுளுடன் வாழ்கிறோம்

பொதுவாக தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பாற்றும் பொருட்டு அவதாரங்கள் தோன்றுவது வழக்கம்.

திரேத்தயுகத்தில் நல்லவர்கள் ஒரு நாட்டிலும் தீயவர்கள் வேறு ஒரு நாட்டிலும் வாழ்ந்தார்கள். இராமாவதாரம் நிகழ்ந்தது. இராமர் தீயவர்களான இராவண கூட்டத்தினரை அழித்து நல்லோரைக் காப்பாற்றினார்.

அடுத்தது துவாபரயுகம். இந்த யுகத்தில் தீயவர்களும் நல்லவர்களும் ஒரே குடும்பத்தில் இருந்தனர் கிருஷ்ண அவதாரம் நிகழ்ந்தது. கிருஷ்ண பகவான் தீயவர்களாகிய கௌரவர்களை அழித்து பாண்டவர்களைக் காப்பாற்றினார்.

இன்று கலியுகத்தில் நல்ல குணங்களும் தீயகுணங்களும ஒரு உடலிலேயே இருக்கிறது. அதாவது உலகமக்கள் அனைவரிடமும் நல்லகுணங்கள் தீயகுணங்கள் இருக்கிறது. மற்றயுகங்கள் போல அழிப்பதாக இருந்தால் அத்தனை பேரையும் நான் அழிக்கவேண்டும்' அதனாலே இந்த சாயி அவதாரத்தில் நான் யாரையும் அழிக்கவரவில்லை எல்லோரையும் 'திருத்தவே வந்திருக்கிறேன். திருந்திக்கொள்ளுங்கள் என கலியுக அவதாரமாகிய பாபா உலகமக்களைக் கேட்டுக்கொள்கிறார்.

> மானிப்பாய் சத்ய சாயி சேவா நிலையத்தின் சேவைப் பிரிவினரால் நடாத்தப்பட்டு வந்த தையல் பயிற்சியின் இறுதி நாளான 21-01-99 அன்று மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது சிறப்பு விருந்தினராக வருகை தந்த நிறுவன பதில் சேவை இணைப்பாளரும் கொக்குவில் சதய சாயி சேவா நிலையத் தலைவருமான திரு. S. சிவநேசன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

எனவே நாம் எப்போதும் நல்ல சிந்தனையுடன் நல்ல காரியங்களை வல்ல சேவைகளைச் செய்ய வேண்டும். சேவை செய்யும் போது அகங்காரம் கோபம் போன்ற தீயகுணங்கள் அழிக்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக இந்தியாவில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தைச் சொல்கிறேன்.

## நல்ல செயல்கள் காப்பாற்றியது

தமிழ்நாடு ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவனங்களின் மாநிலத் தலைவர் திரு G. கிருஷ்ணமூர்த்தி தன் குழுவினருடன் பகவான் பாபா தரிசனம் பெறும் பொருட்டு புட்டபர்த்தி நோக்கிக் காரில் சென்று கொண்டு இருந்தார். வழியில் கார் தடம் புரண்டு மூன்று கரணம் போட்டு பிரண்டது

காரில் பிரயாணம் செய்தவர்கள் அனைவரும் எந்தவிதமான காலமும் இன்றி உயிர்தப்பினர். ஆனால் அந்தக் காரில் செல்லமுடியாதபடி பழுதடைந்து விட்டது வேறு ஒரு காரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு புட்டபர்த்தி சென்றார்கள்.

★ தொகுப்பு:- கே. உஷா ★

அங்கு பேட்டி கொடுக்கப்படும் அறையில் ஜப்பான் நாட்டுப் பக்தர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்த பாபா திரு கிருஷ்ண மூர்த்தியை நோக்கி, ''என்ன நடந்தது என்று சொல்'' என்றார்.

திரு. கிருஷ்ணமூர்த்தி நடந்ததைக் கூறுகிறார். முடிவில் ''ஸ்வாமியின் அருளால் நாம் எல்லோரும் காப்பாற்றப்பட்டோம்'' என்று முடித்தார்

உடனே பாபா அதை மறுத்து நான் உன்னைக் காப்பாற்றவில்லை நீ செய்த நல்ல காரியங்கள் என்னும், புண்ணியம் எல்லாம் உன் ஆன்மீக வைப்பில் (Spiritual Bank) சேகரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பகுதி எழுந்த வந்து உன்னைக் காப்பாற்றியது. கஸ்டங்கள் வந்து வந்து ''ஆன்மீக பாங்'' புண்ணியம் தீர்ந்து போனாலும் தொடர்ந்து நல்லன செய்வோம் என்ற எண்ணம் கடவுளுக்கு ஏற்படுமானால் OverD தருவது போல Over Draft.

பாங்கில் நாம் பணம் போட்டு சேகரிப்பது போல நல்ல காரியங்கள் சேவைகள் செய்து புண்ணியத்தை சேகரித்துக் கொண்டோமானால் அது ஆன்மீக பாங்கில் (Spiritual Bank) போடப்பட்டு ஆபத்துக் காலங்களில் கைகொடுத்து உதவும். எனவே நல்ல செயல்களை நற்காரியங்களை நாம் செய்யவேண்டும்.

11ம் பக்கம் பார்க்க.

# தூதன் கருத்து

## நற்குணங்களை வளர்ப்போம்

**சாய்ராம்...!**

தெய்வம் ஒன்றுதான். கிறிஸ்தவர்கள் யேசு யகோபா, என்றும் இஸ்லாமியர்கள் அல்லா என்றும் இந்துக்கள் சிவன் என்றும் போற்றி வணங்குகிறார்கள்

சிவம் என்றால் மங்களம். சிவராத்திரி என்றால் மங்களகரமான இரவு இந்த நல்லிரவில் மங்களகரமானவற்றை நம்முள் ஏற்று அதனை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

அந்த மங்களம் நம்முள்ளே தெய்வமாக உரைந்துள்ளது. அதை எங்கும் வெளியே தேடவேண்டிய அவசியமில்லை ஒரு மனிதனை மிருகமாக்குவது காமம் (ஆசை) குரோதம் லோபம் (கருமித்தனம்) மோஹம், மதம் (தற்பெருமை) மாத்சர்யம் என்ற ஆறுவகைப்பட்ட தீய குணங்களும், இராதுவேஷ என்று சொல்லப்படும் விருப்பு வெறுப்பும் ஆகும்.

கலியுகத்து மக்களிடையே மங்களகரமான நற்குணங்களும் அரக்கத்தனமான தீயகுணங்களும் ஒவ்வொருவரிடமும் உண்டு நன்னீரைப் பாசி மூடியிருப்பது போல நெருப்பை சாம்பல் மறைத்து இருப்பது போல ஒருவருடைய நற்குணங்கள் எல்லாம் தீயகுணங்களாலே மூடப்பட்டுள்ளது.

எங்களுடைய தீயகுணங்கள் எங்களுக்குத் தான் தெரியும். ஒவ்வொருமுறை தீயகுணங்கள் எழும்போதும் ஓ.. நான் மனிதன்.. மிருகமல்ல அரக்கன் இல்லை. என்னுள் தெய்வம் இருக்கிறது. ஆகவே நான் தெய்வத்துக்கு சமமானவன். இது என் குணமல்ல — இந்தத் தீய குணங்களை நீக்கி, நற்குணமுள்ள தெய்வீக புருஷனாகத் திகழவேண்டும் என்று எமக்கு நாமே போதனை செய்ய வேண்டும்.

பாசி படர்ந்த கிணற்று நீரை இறைத்து வெளியேற்றி விட்டால் நன்னீர் ஊற்றெடுப்பது போல, தீய குணங்களை வெளியேற்றி விட்டோமானால் மங்களகரமான நற்குணங்களான சத்யம், தர்மம், சாந்தி அன்பு, அகிமசை பிரகாசிப்பதை நாமே காணலாம்.

ஆனால் இந்த நற்குணங்கள் திடீரென எம் முள் பிரகாசிக்குமா?

இல்லை......!

நற்குணங்கள் என்றும தூய உணர்வுகள் ஏற்பட தூய்மையான சாத்வீகமான உணவை மட்டுமே நாம உண்ண வேண்டும். அப்போது தான் உள்ளுணர்வுகள் தூய்மையாக விளங்கும் தூய்மையான எண்ணங்கள் மலரும் தூய்மையான செயலகள், சேவைகள் செய்ய முடியும்.

''தூய உறவு மட்டுமல்ல, தூய, புனிதமான பார்வையும் அவசியம் எவரையும் தவறான பார்வை பார்க்காதீர்கள், மற்றவர்களைப் பற்றி இழிவாகப் பேசாதீர்கள். தவறான எந்தச் செய்திகளையும் கேட்காதீர்கள். தீய எண்ணங்களுக்கு மனதில் இடம் தராதீர்கள். தவறான செயல்களில் ஈடுபடாதீர்கள். இவற்றைத் தவிர தன்னை முன்னேறக் கொள்வதற்காக ஒருவன் செய்ய வேண்டியது வேறெதும் இல்லை. என பகவான் பாபா கூறுகிறார்.

எனவே மங்களகரமான இந்தச் சிவராத்திரி நன்னாளிலே பகவானின் வழிகாட்டலின் படி நடந்து அவர் அன்பு அருள் ஆசியைப் பெற பாடுபடுவோம்.

**ஜெய்சாய்ராம்**

செவிகளுக்கு தெய்வீகமான சொறகளைக் கேட்பதே அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனுக்கு உகந்த இரவு சிவராத்திரி

**- பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா -**

எல்லா பண்டிகை தினங்களும் தெய்வத்துவத்தை அடைய நமக்கு வழி காட்டுபவையாக உதவி செய்பவையாகவே அமைந்திருக்கின்றன. அவை தெய்வவீகத்தைப்பற்றி இடை விடாமல் சிந்திக்க வழிவகை செய்கின்றன. ஆனால் நாம் ஆத்தகைய தினங்களில் தெய்வீகத்தைப் பற்றி நினைக்காமல் உணவிலும், மற்ற சந்தோஷங்களிலுமே காலத்தை வீணாகக் கழிக்கிறோம்.

இத்தகைய பண்டிகைகள் ஏன் கொண்டாடப்படுகின்றன? நம்முடைய எணணங்கள் புனிதமாகத் தான் இத்தகைய பண்டிகைகள் கொண்டாடபபடுகின்றன. தெய்வத்துவத்தை இவை எமக்கு உணர்த்துகின்றன,

இன்று சிவராத்திரி பண்டிகை. இரவு என்பது தினந்தோறும் வந்து போவது முழுமையான இருள் சூழ்ந்த இரவுகள். இந்த இரவும் கூட வெளிப்புறத்தில் இருள சூழ்ந்ததாகத்தான் இருக்கும ஆனால் உள்ளததில பிரகாசம் இருக்கும். இருதயத்தில் காணப்படும் இந்த ஒளி சுபத்தைக் குறிக்கும மங்கலமான ஒன்று ஆகையால் இதற்கு சிவராத்கிரி என்று பெயர் வந்தது.

சிவராத்திரி உலகில் உள்ள எல்லா இந்துக்களுக்கும் உகந்த மிக மங்கலமான புனித தினமாகும். பௌர்ணமியிலிருந்து அமாவாசை வரையுள்ள காலம் தேய்பிறை அல்லது கிருஷ்ணபடசம் என அழைக்கப்படுகிறது. கிருஷ்ணபட்சத்து பதின்னான்காவது நாள் சிவராத்திரி. ஒவ்வொரு மாதத்திலும் ஒரு சிவராத்திரி வருகின்றது.

எனினும் மாசி மாதத்து கிருஷ்ணபட்சத்து சதுர்த்தசி அன்று நள்ளிரவு இறைவனுக்கு மிகவும் உகந்ததாகக் கருதப்படுகிறது. இத்தினம் மஹா சிவராத்திரி என அழைக்கப்படுகிறது.

சிவம் என்றால் மங்களம். இரவு என்றால் இருள். இந்த இருளில் மங்களகரமானது ஒன்றிருப்பதைக் குறிப்பதே சிவராத்திரி. இவ் இரவில் வெளியில் இருள் சூழ்ந்திருந்தாலும் இதயத்தில் தெய்வத்தை இருத்திக் கொண்டால் அங்கே இருள் விலகி ஒளி பிறக்கும். இத் தினத்தில் மங்கலமானவற்றை நம்முள் ஏற்று அதனை வளர்ச்சி அடையச் செய்யும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

மனதிற்கு சம்பந்தமானது பதினாறு கலைகள். மனம் சந்திரனுடன் நெருங்கிய தொடர்புடையது. சந்திரன் மனதின் அதிதேவதையாகும் பௌர்ணமி நாளிலிருந்து சந்திரனின் பதினாறு கலைகள் பிரதி தினமும ஒவ்வொன்றாகத் தேய்ந்து சதுர்த்தசி இரவில் ஒரு கலைதான் மீதமாகின்றது.

மனது ஆசைகளின் மூட்டையாகும். ஆசைகள் அற்றபின் மனமில்லை மனது வெற்றி கொள்ளப்பட்டு அழிக்கப்பட வேண்டும். அப்போது தான் அதனுடைய சலனங்கலாலும் நிலையற்ற போக்குகளாலும் ஆன்மீக முன்னேற்றம் தடைப்படாது. ஆன்மீக சாதனைகளைக் கடைப்பிடித்தால் சந்திரன் தேய்வது போல மனதும் தேய்ந்து வரும்.

முடிவாக கிருஷ்ணபட்சத்து சதுர்த்தசி அன்று அழிக்கப்படவேண்டிய ஒரு சிறு பகுதி மட்டுமே உளளது. அன்று விழித்திருந்து இறைவனுடைய பெருமையில் ஆழ்வதனால் ' மனதை'' (ஆசைகள்) அழிக்கும் சாதனையில் வெற்றியடைய முடியும்.

## புனிதமான அர்த்தம்

சிவராத்திரிக்கு என சில புனிதமான அர்த்தங்கள் உண்டு. இந்த இரவில் நாம் விழித்திருகக வேண்டும். இரவு முழுவதும் விழித்திருக்க வேண்டுமெனில் எப்படி?



இப்புனித இரவிலாவது சிவநாமத்தை உரைத்தபடி விழித்திருக்க வேண்டும். அதைவிட்டு திரைப்படங்கள் பார்ப்பதும் தொலைக் காட்சி பார்ப்பதும் அதன் மூலம் விழித்திருப்பதும் சரியல்ல இவை சிவராத்திரியின் மகத்துவத்தைக் குறைப்பதாகும்.

உண்மையில் சதுர்த்தசி அன்று தூங்காமல் விழிப்பாக ஒருவர் இருக்க வேண்டும் என்பது ஒருவன் சாசுவதமாக ஆன்மீக விஷயங்களில் விழிப்பாக இருக்க வேண்டுமென்பதையே குறிக்கிறது.

இத்தினத்தில் நாம் உணவருந்தாமல் இருப்பதை உபவாசம் என்கின்றோம் உபவாசம் என்றால். சமீபத்தில் வசிப்பது என்று பொருள் எதற்கு சமீபம்? தெய்வத்திற்கு சமீபமாக இருப்பதையே இப்பதம் குறிக்கின்றது. இந்நாளை எந்நேரமும் இறை சிந்தனையுடனேயே கழிக்க வேண்டும். உண்ணாமலிருக்க வேண்டுமென்பது புலன்கள் அடைய விரும்பும் இன்பங்களை விட்டாக வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

உலகவாழ்வுக்குரிய எண்ணங்களை வளர்த்து மனிதன் காலத்தை வீணே கழிக்கிறான் சதுர்த்தசி இரவன்று மனதின் ஒரு கலைதான் எஞ்சியுள்ளது, இந்த இரவு இறைவனின் நாமம் சொல்லி அந்தக்கலையும் அழித்து விட உதவியான மிகச் சுலபமான தினம்.

தெய்வத்தின் பெருமையை ஒரு இரவாவது பாடி விழித்திருப்பதன் மூலம் எமது வாழ்க்கை புனிதமாகும்.

திவ்யமான சேவையை மற்றவருக்குச் செய்து தெய்வத்துவத்தை அனுபவிக்கத் தகுந்த முயற்சி செய்ய வேண்டும். இதுவே சிவராத்திரியின் உட்கருத்தாகும்.

* * *

# இறைவன் இல்லாத இடம் ஏது?

ஒரு குரு தனது சீடன் மேலும் உயர்வடையும் பொருட்டு சிவன் கோயிலிலிருந்த யாசகன் ஒருவனிடம் அனுப்பி வைத்தார். சீடன் கோயிலை அடைந்த போது கர்ப்பக்கிருக மத்தியில் உள்ள சிவலிங்கத்தின் மீது அந்த யாசகன் இருகால்களும் பட்டவண்ணம் சாய்ந்து படுத்து இருப்பதை பார்த்தான்.

அவனது திமிரால் அங்கிருந்த அனைவரும் உள்ளபடியே ஆத்திரமூற்றனர் அவனுடையநடத்தையால் சினமுற்ற சீடன் யாசகனைக் கடிந்துரைத்தான் அதற்கு அவன்,

''தயவு செய்து என்னுடைய கால்களை இலிங்கம் இல்லாத இடத்தில் வையுங்கள்'' என்று கேட்டான் அப்டிச் செய்த போது அவன் பாதம் வைக்கப்பட்ட புதிய இடத்திலும் ஒரு லிங்கம் எழுந்தது.

இப்படியாக அவன் கால் வைக்கும் இடமெல்லாம் அவறறைத் தாங்கும் வகையில் லிங்கம் தோன்றிய வண்ணம் இருந்தது அந்த நிகழ்ச்சி மூலம் இறைவன் எங்குமிருக்கிறார் என்ற பாடத்தை அந்த யாசகன் சீடனுக்குப் போதித்தான். யாசகன் பெற்ற பேற்றை பெற நீங்களும் உங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளுங்கள்.

* * *

இறைவனின் நாமங்களை ஜபிக்காது ஒருவரும் முத்தி அடைந்தது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாபா வெளிப்படுத்திய ஜோதிர் லிங்கம்

1968ம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி இந்த யுகத்தின் முக்கியமான நாள். பாபா சோமநாதரின் ஆலயத்துக்கு தெய்வீக சக்தியை அளித்த பொன்னான நாள்

இந்தியாவில் இந்து ஆலயங்களிலேயே சோமநாதர் ஆலயம் தான் செல்வம் மிகுந் திருந்தது முகபதியார் ஆண்டு வந்த காலத்தில் கொள்ளை அடிப்பவரின் கவனத்தை ஈர்த்தது இந்த ஆலையம்.

இடிந்து போய் இருந்த அந்தக் கோவிலை புதுப்பிக்கும் புனர் உத்தாரண வேலையில் நவ நகர் அரசரும் ஈடுபட்டிருந்தார். அவர் மறைந்து விட்டாலும் அவர் பிரார்த்தனையை நிறை வேற்றி வைத்தார்.

அந்தக் கோவிலை திறந்து வைக்க பக வான் வரவேண்டும் என்று முயன்று ராஜ மாத அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார் உண்மை யான சோமநாதரை அன்று வெளிப்படுத்தப் போவதாக பாபா அறிவித்தார்.

அலங்காரப் பந்தல்களுக்கு பாபா வரவேற்க் கப்பட்டார். கோவில் நிர்வாகிகளும் அரசாங்க அதிகாரிகளும் கூடி வரவேற்றனர். கலை அழகு மிகுந்த வெள்ளிப்பூச்சுப் பூசப்பட்ட ''திக்விஜய்'' வாயிலை பாபா வெள்ளித் திறவு கோலால் திறந் தார்.

பின் பாபா கருவறையை நோக்கி அழைத் துச் செல்லப்பட்டார். உள்ளே சென்ற பின் ஒரு தட்டுக் கொண்டு வருமாறு பணித்தார் அந்தத் தட்டில் தனது விரல்களை விரித்து உள்ளங்கை யால் மூடினார்.

கலகல வென்ற ஓசையோடு நூற்றியெட்டு தங்கத்திலான வில்வத்தளங்களும், நூற்றெட்டுத் தங்க மலர்களும் விழுந்தன. அங்கிருந்த லிங்கத தின் மேல் இந்தத் தளங்களையும மலர்களையும் பொழிந்தார்.

மீண்டும் தனது கைகளை பாபா அசைத் தார். கண்களைக் கூச வைக்கும் ஒளிக் குவியல் ஒன்று தோன்றியது. ஜோதிர்லிங்கத்தை பாபா தனது கைகளில் ஏந்தி நின்றார். திருடப்படாம லும் புனிதம் கெடாமலும் இருப்பதற்காக பூமிக் கடியில் ஆழத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சோமேஸ்வரரை பாபா வெளிப்படுத்த முடிவு செய்து அதை செயல்படுத்தி விட்டார்.

லிங்கத்தை வைப்பதற்காக வெள்ளிக் கம் பம் ஒன்று ஸ்ருஷ்டித்து அர்ச்சகரிடம் கொடுத்து ''இனிமேல் இந்த லிங்கம் இங்கேயே இருக்கட்டும் பக்தர்கள் இதனை தரிசித்து மகிழட்டும் இதனை இனியும் ஒளித்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய பயத்தைப் போக்கவே இந்த அவதாரம் பூவுலகுக்கு வந்திருக்கிறது'' என்று கூறினார் பாபா.

★ ★ ★

# மோட்சம் யாருக்கு...?

- பாபா -

ஒரு முறை சிவராத்திரி நன்னாளில் பர மேஸ்வரரும் பார்வதியும் வாரணாசியின் மேல் ஆகாயத்தில் உலவிச் சென்றனர் இலட்சக்கண க்கில் மக்கள் ஆற்று ஓரத்தில் அந்தப்புனித நக ரின் சந்துகளிலும் கூட்டம் கூட்டமாக நிறைந்து சென்றனர். இறைவன் விஸ்வேஸ்வரரது கோவி லைச் சுற்றிலும் பெண்களும் ஆண்களுமாக பக் தர் கூட்டம் சிவனுடைய புகழைப் பண்ணிசைத் துப் பாடியபடி நிறைந்திருந்தனர்.



அப்போது பார்வதி சிவனைப் பார்த்து இலட்சக்கணக்கில் குவிந்திருக்கும் இந்தப் பக்தர் களைப் பாருங்கள் இவர்கள் அனைவரும் நிச்ச யம் சுவர்க்கத்திற்குத் தான் செல்வார்கள் ஏனெ னில் அவ்வளவு ஆழ்ந்த பக்தி கொண்டவர்கள் இவர்கள் ஆனால் இவ்வளவு பேருக்கும் சுவர்க் கத்தில் தங்க இடம் போதுமா என்பது தான் இப்போது என் ஐயம் என்று கூறினாள்.

பார்வதி கூறியதைக் கேட்ட சிவன் வாய் விட்டு சிரித்தார், பின்பு ''சிவராத்திரி நாளில் வாரணாசிக்கு வருவோர் எல்லோருமே பலவித ஆசைகளை மனதில் நிரப்பி வைத்திருப்பவர்கள் நாம் சுவர்க்கம் செல்வத்தைப்பற்றி நினைக்கக் கூட மாட்டாதவர்கள்" என்று கூறினார்

''மேலும் ஒரு திருடன் தான் திருடிய பணத்தில் பயணச்சீட்டு வாங்கி வாரணாசி வந்தவன் சுவர்க்கம் புக முடியுமா? தூய்மை அன்ப வாய்மை இவைதான் பேரின்பத்தின் வாயிற்கத வுகளை திறக்க வல்லவை இவர்களில் மிகச்சிலரே சுவர்க்கத்தை எட்ட முடி யும் என்பதை உனக்கு தக்கசான்றோடு விளக்கிக் காட்டுகிறேன் என்னுடன் வா நாமிந்த நகரத்திற்குள் வயதான பிச்சைக்காரர்கள் போல நுழைவோம்' என்றுகூறி வாரணாசியினுள் நுழைந் தார் பரமசிவன்.

நூற்றுக்கணக்கான மக்கள் புனி தமான கங்கைநீரை கைகளில் ஏந்தி வழிபாட்டுச் சடங்குடன் விஸ்வேஸ்வ ரர் கோயிலுள்ள இலிங்கத்தின் மீது பொழிய எடுத்துச் சென்றனர்

அவர்கள் கண்களில் படும்படியான இடத் தில் ஒரு வயோதிகன் தன் வயதான மனைவி யின் மடிமீடி தலைவத்துப் படுத்தபடி தாகத்தி னால் வறளும் நாக்கை புரட்டி விட்டுக்கொண் டிருந்தான்.

மனைவியோ, நீர் கொண்டு செல்பவரிடம் ''தண்ணீர் தாருங்கள்! எனக்காக இவரைக் காப் காற்ற இவருக்கு ஒருவாய் தண்ணீர் கொடுங்கள்' என்று இறைஞ்சி வேண்டினாள். பக்தர்கள் என்று விரைந்து வந்து அவர்களது துன்பத்தைப் போக்க எவரும் முன்வரவில்லை. தங்களைப் போகவிடாமல் கெஞ்சுவதைக் கண்டு பலர் அம் மூதாட்டியை வைதனர்,

சிலர் வழியை விட்டு விலகிச் செல்லும்படி கோபமாகக் கட்டளையிட்டனர். மிகச் சிலர் பூசையை முடித்துக் கொண்டு திரும்பும் போது பருக நீர் தருவதாகச் சொல்லினர். பெரும்பான் மையினர், இங்ஙனம் பிச்சை எடுப்பது பெருங் குற்றமாகக் கருதப்பட வேண்டுமென்றும் காவல் துறையினர் இத்தகைய தொல்லைகளை நீக்கி பாதையை சீராக்க வேண்டும், என்றும் கூச்சலிட் டனர்

## ★ குட்டிக்கதை ★

ஓரிருவர் அந்த மூதாட்டி, எல்லோருடைய கவனத்தையும் கவர ஒரு நாடகம் ஆடுகிறாள் என்று எள்ளி நகையாடினர். யாருமற்ற அனா தைகளாகக் கிடந்த அவர்களுக்காக எவர் மன முமசிறிது கூட இளகவேயில்லை.

கடின மனம் பெற்றிருந்த அந்த திருடன் நெகிழ்ந்து போய், ,,அம்மா! நான் இது வரை ஒரு நற்செயல் கூட ஆற்றியதில்லை. ஒருவரது துன்பத்தைக் கண்டு என் மனம் இளகுவது இது தான் முதல் தடவையாகும். அதோ இருக்கும இறைவன் விசுவேஸ்வரனே என் செயலுக்கு சாட்சி,'' என்று கூறியவாறு அந்த சூழ்நிலையில விலை மதிப்பற்றிருந்த அந்த நீரை வயோதிபரி னது வாயில் விட்டார்,

உடனே இறைவன் தமது சுய உருவில் அவ னுக்கு காட்சி தந்தார். வாண்ட இதயத்தோடு பலவகையான மக்கள், இலட்சக்கணக்கில் நெருக் கமாக திரண்டு வந்திருந்த வாரணாசியில் அவர் ஒருவன் தான் சுவர்க்கத்தில் புக அருகதை உள்ள வன் என்று அவனை வாழ்த்தினர். அவனின் வாய்மையும் அன்பும் அவனுக்கு கடவுளின் கரு ணையைப் பெற்றுத் தந்தன.

✻ ✻ ✻

எல்லா ஜீவனிடத்திலும் இறைவனைக் காண முயலுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதனின் இன்றைய நிலை

**- இராமகிருஷ்ண பரமகம்சர் -**　　ஜனனதினம் 18 - 02 - 99

பெறுதற்கரிய இம்மனிதப் பிறவியை பெற்ற மனிதன் இப்பிறப்பிலேயே ஈசுவரனை அறிய முயலாது போனால் வீணில் பிறந்தவனே யாவான். இந்த உலகிற்கு மூலப்பொருளாக இருப்பவன் ஈசுவரனே! ஒன்று என்ற இலக்கத்தின் பின் பூஜ்யங்களை சேர்த்தால் அது நூறாகவும் ஆயிரமாகவும் ஆகின்றது. ஆனால் அந்த ஒன்று என்ற இலக்கத்தை அழித்து விட்டால் மிகுந்திருப்பவைக்கு மதிப்பில்லை. இந்த ஒன்றினால் தான் பலவற்றுக்கு மதிப்பீடு அதிகரிக்கின்றது.

எனவே முதலில் ஈசுவரன், பின்னர் ஜீவனும் உலகமும் என்று மனிதன் தெரிந்து கொள்ள வேண்டும். முதலில் ஈசுவரனைத்தேடி அப்பால் உலகப்பொருளை தேடவேண்டும்.

ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு உலக வாழ்க்கையில் பிரவேசித்தால் மனிதனுக்கு சஞ்சலமே இராது பட்டணத்திற்கு புதிதாக வருபவன் இராத்திரி வேளையில் தங்குவதற்கு சௌகரியமான ஒரு விடுதியை முதலில் தேடி அங்கே தனது பொருட்களை வைக்கவேண்டும். பின்னர் அவன் ஊர்சுற்றி வேடிக்கை பார்க்கப் போகலாம் இல்லையேல் இருட்டில் இடம் தேடுவதில் கஷ்டப்படுவான்

இதுபோலவே இவ்வுலகத்தில் மனிதப்பிறவியை எடுத்த மனிதனும் ஈசுவரன் ஆகிய நித்திய விடுதியை தேடி வைத்துவிட்டு பயமின்றி இவ் உலகில் திரிந்து தான் செய்ய வேண்டிய காரியங்களை செய்யலாம். இல்லாவிட்டால் மரணமாகிய பயங்கரமான அந்தகாரம் வரும் போது மிகுந்த துன்பங்களை அவன் அனுபவிக்க நேரும்.

முழுமனத்துடன் கசிந்துருகி, ஸாதன மார்க்கங்களை அனுஷ்டிக்க வேண்டும் மனதை உலக விஷயங்களில் சிதற விடாமல் அவனிடத்திலே நிலைத்திருக்கச் செய்யவேண்டும் சாதனை இல்லாவிட்டால் ஈசுவரனை எளிதில் காண முடியாது, சாதனை செய்து அந்தப் பேரின்பத்தை அனுபவிக்காமல் உலக விஷயமாகிய சிற்றின்பத்தின் வசப்பட்டு மாயையாகிய வலையில் வீழ்ந்து அதிலேயே இறந்தொழிதல் மனிதனின் இன்றைய நிலையாக உள்ளது.

தொகுப்பு:- சி. சிவா.

## மாசி மகத்தின் சிறப்பு

மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திரத்தோடு கூடிய புண்ணிய காலம் மாசி மகம் எனப்படும்.

ஆதிகாலத்தில் ஒரு கொடிய அரசன் இருந்தான். அவனை வெல்வதற்கு ஏற்ற உபாயத்தைக் கூறும் பொருட்டு அவனுடைய குரு இருளிலே வருணதேவனிடம் சென்றார்

அவரைப் பகைவன் என்று நினைத்த வருணன் தனது பாசத்தை அவர் மேல் வீசினான் குரு இறந்தார். அக்கொலைப் பாவத்தினால் ஒரு பிசாசுவடிவம் தோன்றியது.

அது அவனை இரண்டு கால்களோடும் இரண்டு கைகளோடும் பொருந்தக் கழுத்தோடு கூடும்படி கட்டிச் சமுத்திரத்தினுள்ளே விட்டது. வருணன் அங்கே நெடுங்காலமாகத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டு இருந்தான்.

அவனது துன்பத்தை நீக்கும்படி மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் சிவபெருமானை வேண்ட சிவபெருமான் சமுத்திரத்தில் எழுந்தருளி வருணனுடைய கட்டை அறுத்தருளினார், வருணன் எழுந்து சிவபெருமானை வணங்கி ''மாசிமகமாகிய இத்தினத்திலே இத்துறையிலே நீராடியவருடைய பாசத்தை நீக்கி முத்தியைக் கொடுக்க வேண்டும். தேவரீர் அத்தருணம் எழுந்தருள வேண்டும் என்று பிரார்த்தித்து வரங்களைப் பெற்றான்

இச்சரித்திரத்தை வியாக்கிரபாத முனிவர் இரணியவர்மச் சக்கரவர்த்திக்குக் கூறினார். அவர் மாசி மகத்தினம் வரச்சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானுக்கு கொடியேற்றுவித்தார். தேவர்கள் முனிவர்கள் வந்து விழாவை தரித்துக ''கனகசபைக்குத் தலைவரே! அருள் செய்க'' என்று வேண்டினார்கள்.

சிவபெருமான் வருணனது பாரத்தை நீக்கியருளிய துறையிலே திருமஞ்சனமாடி அடியார்களுக்கு அருள் புரிந்து கனகசபையில் புகுந்தருளினார்.

தக்கனும் உமையை மகளாகப் பெறத் தவஞ்செய்து வரம் பெற்றிருந்தான்.

அம்பிகை காளிந்தி நதியில் ஒரு தாமரைப் பூவில் வலம்புரிச்சங்கு வடிவாய் இருந்தாள். மாசி மகத்தில் தக்கன் வேதவல்லியோடு நீராட வந்த போது வலம்புரிச் சங்கைக் கண்டு எடுத்தான்.

அச்சங்கு அழகிய ஒரு பெண் குழந்தையாயிற்று இறைவியே குழந்தையாய் வந்த இத்தினம் மாசி மகம் ஆகும்.

– ஆதாரம் - சைவசமய புண்ணிய காலம் –

தொகுப்பு: இ இந்திரா

★ ★ ★

## ஜொராஷ்டிரர் சிந்தனைகள்

- கடவுளை நம்பு நல்லது செய்.
- இயற்கை முழுவதுமே கடவுள் இருக்கிறார் என்பதற்கு அத்தாட்சி.
- இருட்டில் நடக்கப் போகிறாயா, கடவுளின கையைப் பிடித்துக் கொள் அது வெளிச்சத்தை விடவும சிறந்தது. தெரிந்த பாதையைக் காட்டிலும் மிகவும பாதுகாப்பானது.
- குழப்பமான வேளைகளில் எல்லாம் மனித குலத்தைத் தெய்வ நெறிப்படுத்த 'அஹுரா மஸ்தா (கடவுள்) தனது சிறப்புத் தூதர்களை அனுப்புகிறார்.
- சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆசியவை எல்லாமே நமக்கு வெளிச்சம் தருகின்றன, ஆனால் உலகிற்கு ஒளி தருவதற்காக அவற்றிற்கு வெளிச்சம் தருபவர் கடவுள்.
- மரத்தை வெட்டாதே பசுஞ்சோலையை அழிக்காதே, பாழ் நிலததையும் பாலைவனத்தையும் சோலையாக்கு.
- தெய்வத்திடம் அன்பு என்ற வெட்டுப்பாறையில் சிறந்தவைகள் தான் பலியிடப்படும் நோயுற்றவைகளோ நோஞ்சான்களோ அல்ல. நீ உண்மையுள்ள இறையன்பனா? அப்படியானால் பலியிடப்படுவதில் இருந்து ஓடிவிடப் பார்க்காதே பலியிடத் தகாததை வெறும்-சடலம் (பிணம்) என்று சொல்வார்கள்.
- ஆயிரம் தொழுகை இடங்கள் நிர்மானிப்பது ஓர் ஆன்மாவை சந்தோசப்படுத்துவதை விட சிறந்தது அல்ல
- உணமையிலேயே பிரார்த்தனைக்கு அபார சக்தி இருக்கிறது, அது கடவுள் பிரவேசிப்பதற்கு உள்ளக்கோவிலின் கதவுகளைத திறப்பதாகும.
- வாசனைப் பொருட்களை விற்கும் கடை வீதிக்கு நீ சென்றுவந்தால் உன்னுடை நறுமணம் வீசும். கரிககடைக்குப்போய் வந்தால் உன் உடையில் கரி ஓட்டும்.
- உனக்குள் குடிகொண்டிருக்கும் எல்லையற்ற ஆற்றலை நீ உணர்ந்து கொள்.
- இளமையில் நல்ல விதமாக வாழ்பவன் முதுமையில் இளமைக் காலம் பற்றி நினைத்துப் பார்க்கும் போது இனிய நினைவுகள் உள்ளத்தில் எழும்.
- கந்தல் உடுத்திப் பணிவாக இருப்ப துதங்கத்தால் இளைத்துக் கொண்டு பெருமையடிப்பதை விட அழகாக இருக்கிறது.
- தொழுகையில் உயரும் கைகளைவிட உழைக்கும் கரங்களுக்கு மிகவும் மதிப்பு அதிகம. சுறு சுறுப்பாக உழுது பாடுபடுகிறவனுக்கே நல்ல அறுவடை கிடைக்கும்.
- சுபீட்சம். சலியாத உழைப்பின் அடியொற்றிப் பின தொடரும,
- தூய்மையும் எளிமையும் கொண்ட வாழ்க்கை தான உண்மையிலேயே மகத்தானது.
- மற்றவர்களின் மகிழ்ச்சிக்காகப் பாடுபடுபவன் தான் எல்லோரையும் விட மகிழ்ச்சியானவன்.

தொகுப்பு: செ. செல்வராணி

எல்லா நாமங்களும் எல்லா உருவங்களும் எனதே. - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமலர்கள்

## ஆத்ம சாந்தி

புலன்களை தன் வசம் கொள்ளாதவன்
தூய மனதை அடைய முடியாது
தூய மனம் இல்லாதவனுக்கு
தெய்வீக உணர்வுகள் இராது
தெய்வீக உணர்வுகள் இல்லாத போது
ஆத்ம சாந்தி இராது
ஆதம சாந்தி இல்லாத போது
அவனுக்கு சாந்தி இராது

— பாபா —

## சாயி மாதா!

ஓம சாயி மாதா!
மாயை எனனும் இருளில்
அகப்பட்டு இருந்த எனக்கு
உன்னுள்ளேயே ஒளி உண்டு என்ற
சத்தியத்தை உணர வைத்தீர் தாயே!

இல்வுலகில் பிறந்த நாள் முதல்
என்னை வழி நடத்தி வந்துள்ளீர்
அஞ்ஞானத்தில இருந்த எனக்கு உமது
பல வடிவான திருவுருவங்களையும்
உமது அன்பினால் உணர வைத்தீர் தாயே!

உமது அளப்பரிய கருணையினால இன்று
நீர் தான் அப் பரம் பொருளின் வடிவம்
என்று உணர்ந்துள்ளேன்
எனக்கு ஒளி கொடுத்த தாயே!
இனி உம்மை ஒரு கணப்பொழுதும் மறவேன்

எனது உயிர் மூச்சு உள்ள வரை
உம்மை மறவாது இருகக உமது
கருணை மழையை என் மீது பொழியும் தாயே!
ஓம் சாயி மாதா! உமது தாமரை மலர்ப் பாதங்களை
எனது மனதில் எந்நாளும் வைத்து பூஜிக்கின்றேன்

திருமதி மாலா விஜயநாதன்
வெள்ளவத்தை

★ ★ ★

## ஞானதீபம் ஒளிரட்டும்

உன் திருநாமம் எம் ஆன்ம நாதம்
உன் ஒளிப்பார்வை எம் வழிப்பாதை — சாயிராம்
உன புண்ணிய திருவடி பட்ட இடம்
என்ன புண்ணியம் செய்தது என்று — உங்கை உறும்
எம் பாவ இருள் அகற்றிடும் நம்பிக்கை தீபமே
ஞானக்கடலே எம்நாவில் ஒரு துளி நீ தருவாய்
மோனக்கடலில் மோகம் தொலையும் குவிகரம் தாமரையாக
ஆவ் சொரியும் தேகம் மகிழும் ஞானதீபத்தில் வேள்வியாகும்
இனிவரும பூமி மைந்தர் இனி அருள் பெற்றிட
ஞான தீபம் சுடா தருவாய் இடர் களைவாய் சாயிராம்!!

க. இந்திரகுமார்
கொடிகாமம

## ஓ.... மனிதா ......!

நீ இன்னும் சிந்திக்க தொடங்க வில்லையா ....?
தினமும கோவிலுக்குச் செல்கிறாய் ..!
பக்தி உளளவன் போல் காட்டிக் கொள்கிறாய் .....!
இப்படி இருந்தால் போதுமா ...!
நீ உன்னையே ஏமாற்றிக் கொள்கிறாய்......!
உண்மையான பக்தன் என்றால் ¡
தனனலங் கருதாது பிறருக்கு சேவை செய் ....!
ஒரு நாளைககாவது ஏழைக்கு உணவளி .....!
எல்லோரிடமும் இறைவன் உள்ளான் என,
எண்ணி எல்லோரையுமு சமமாகப்பார் .. !
உனககு வாழ்வில் நிரந்தரமான சந்தோஷம் கிட்டும் ....!

- ராஜன் -

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

இறை தூதனே நீ மிகவும் அற்புதமானவன்
இறை தத்துவங்களை எடுத்தியம்பும் தூயவன்
மதவெறி கொண்டோர்க்கு மமைதன்
சர்வமதக் கோட்பாடு கொண்டவனே நீ வாழ்க!

உனது புகழ் மேலும் வளரட்டும
உன் சேவை மக்களின் தேவை ஆகட்டும்
தினமுரசு வாங்க காவல் நிற்போரே - எனிஎம்
இறை தூதன் வாங்கும காலமாகட்டும் நீ வளர்க!

புத்தாண்டு தனில் புனிதமாய் நீ வாழ்க
புதுப்பொலிவோடு மெருகேற்றி மென்மேலும் வளர்க!
சாயி நாதன் துணைகொண்டு என்றும் நீ மிளிர்க!
தூயோனின் கருத்தோடு துடினமாய் நீ ஓங்குக!

திருமதி ந. சக்தியா
நவாலி

## அறிவித்தல்

### இல்வச வைத்திய சேவை

மானிப்பாய் சத்ய சாயி சேவா நிலையத்தினால் மாதம் ஒருமுறை நடாத்தப்படும் இலவச வைத்திய சேவை இம்மாதம் 27ம் திகதி சனிக்கிழமை மாலை 2 மணி - 5 மணி வரை நடைபெறும்.

Dr. சிவராணி சிவசோதி
தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி
மற்றும்குழுவினர்

இடம்:- மானிப்பாய் சத்ய சாயி நிலையம் (பிரிவு I)
மகேசன் வீதி, நவாலி.

தீயோரைத் திருத்தக் கடவுளை வணங்கு. - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழத்தெரிந்து கொண்டாள்

## சிறுகதை

**தி. சத்தியசிலி**

யாழ்ப்பாணத்தில் ஓர் அழகிய கிராமம் அக்கிராமததில் தான் அந்த குடும்பம இருக்கிறது அது அதிக பணவசதியில்லாத ஒரு சாதாரண குடும்பம். அந்தக் குடும்பத்தில்தான் சத்தியா மூத்த பிள்ளையாக பிறந்திருந்தாள்.

அவளிற்கு இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் இருந்தனர். இளவயதிலேயே தந்தையை இழந்துபோனபடியால் தன் குடும்பத்தைக் காப பாற்ற சத்தியா சாதாரணதரத்துடன தன படிப்பை நிறுத்தி கௌரவமான ஒரு தொழிலில தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். அவளுடைய வருமானம் அவர்களிற்கு போதுமானதாய் இருந்தது.

காலம் நகர்ந்து செல்கையில் தங்கைகள் இருவரும் கல்வி முடிந்து உயர் தொழிலைப் பெற்றிருந்தனர். தம்பி ஸ்ரீராம் கல்வியைத தொடர வெளிநாடு செல்லவேண்டியிருந்தது. சத்தியாவிற்கு தம்பி வெளிநாடுசெல்வதில் இஷ்டமில்லை. பிறந்த மண்ணில் கல்விகற்று அந்த மண்ணிற்கே உபகாரம் செய்யவேண்டும் என்பது அவள் விருப்பம். எனினும் அவன் பிடிவாதமாக வெளியூர்போய்ச் சேர்ந்தான்.

தங்கை இருவரின் அழகும, உயர் தொழிலும் அவர்களிற்கு திருமணம் முடித்து வாழ்க்கை கொடுத்தது. தம்பி ஸ்ரீராமும் வெளிநாட்டில திருமணம் செய்து கொண்டான்,

இப்போது அந்த வீட்டில் இரு ஜீவன்கள் தனித்துவிடப்பட்டன. சத்தியாவிற்கு குடும்பப் பொறுப்பு நீங்கியிருந்தது. ஆனால் அவள் மனதில் வேதனை நிழலாடத் தொடங்கியது

அவள் அழகில் கொஞ்சம் கம்மியாகவே இருந்தாள் படிப்பும் சாதாரணம். எனினும் அன்பும் இரக்கமும நேர்மையானவளும் கூட, ஆனால். உலகத்தின் மாயக்கண்கள் அவளின் வெளித்தோற்றத்தையே அளந்து கொண்டிருந்தன சமுதாயம் அவளை வாளா வெட்டி என்றது. இதனால் அவள் மனம்நொந்து இருந்தாள்.

பக்கததுவீட்டு புனிதம் வேறு அடிக்கடி வந்து "ஏன் பிள்ளை நீ கட்டாமல் இருக்கிறாய், கொஞ்சம் வடிவாய்ப் பிறந்திருக்கலாமே, தங்கச்சிமாரை மாதிரி அல்லது மேல படிச்சிருக்கலாமே" என்று நேருக்குநேர் துளைத்தெடுத்தாள்,

இப்படியான சமுதாயத்தில் அவள் தலை காட்ட கூச்சப்பட்டாள். வீட்டிற்குள் இருந்து குமுறி அழுதாள். "உழைப்பதும் சாப்பிடுவதுமா என் வாழ்க்கை? அப்பா இருந்தால் என்னை இப்படி விடுவாரா? என்னைப்போன்ற எத்தனை பேர் கணவன்மாருடன் இன்பமாக வாழ்கிறார்கள். என சகோதரர்கள் கூட என்னை நினைத்துப்பார்க்கவில்லையே! என் அம்மாவும் இல்லாத காலத்தில் என் கதி என்ன? ம்... ஹூம் நான் வாழ்வதில் பிரயோசனம் இல்லை திருமணம் என்ற ஒன்றில்லாமல் கருகிய என் இதயம் இனி மலரப்போவதில்லை" என துன்பக்கடலில் மூழ்கி மூச்சுவிட முடியாது தத்தளித்தாள் சத்தியா,

அன்று வியாழக்கிழமை. மாரிமழை ஓய்ந்து சூரியன் கதகத என ஒளிதந்து கொண்டிருந்தான். ஆனால் சத்தியாவின் மனம் ஓயவில்லை கட்டிலே தஞ்சம் எனறிருந்தாள். தாயாரும் சோர்ந்து போய் ஒரு மூலையில் இருந்தாள்.

சத்தியாவின் தோழி தேனாள், அந்த தெருவில் குடியிருப்பவள். அவள் சத்தியாவிடம் வந்திருந்தாள் சத்தியாவின் முகத்தைப்பார்த்து அரண்டு போனாள்

'நீ இன்னமுமா இப்படியிருக்கப் போகின்றாய்! நீ வாழத்தெரியாதவள்" என ஏசி அவளை எழுப்பினாள் "என்னைப்பார், எவ்வளவு சந்தோஷமாக சாந்தியாக இருக்கிறேன் ஆத்மீக வழியில் சுயமாய்சேவை செய்து பிறநலத்திற்காய் வாழவேண்டும் என்றால் நாம் தனிமனிதனாக இருப்பதில் நஷ்டமேதுமில்லை என்னைப் போல் வாழத்தெரிந்தவள் எந்தப்பாதை என்றாலும் வீறுநடைபோடுவாள்'

என ஆறுதலும் உண்மையான வார்த்தைகளையும் கூறி அவளை அன்று பஜனைக்கு அழைத்துக்கொண்டு செல்கிறாள் தேனாள்,

சத்தியாவை வாழ வைக்க பகவான் சங்கற்பம் கொண்டாரோ என்னவோ அன்று கருத்துரையில் "ஒரு மனிதன் தனியாக வாழும் போது இரண்டு காலுடன் மனிதனாக இருக்கிறான். பின் திருமணத்தின் பின் நான்கு கால்கள் கொண்டு மிருகமாகிறான். பின் வாரிசுகளுடன் எட்டு, பத்து கால்கள் கொண்டு ஊர்வன போல் ஊர்ந்து திரியும் நிலமைக்கு தள்ளப்படுகிறான்." என்று சுவாமி கூறிய கருத்து கூறப்பட்டது

இதைக்கேட்டதும் சத்தியாவிற்கு அதிர்ச்சியும் சிரிப்பும் வந்தது அதே நேரம் அவள் மனதில், தான் இரண்டு காலுடன் மனிதனாகவே வாழ வேண்டும் என்ற உறுதியும் உண்மையும் மலர்ந்தது.

சோர்ந்து தள்ளாடிய கால்கள் இப்போ எழுந்து ஓடவேண்டும் போல் உணர்வைக்கொடுத்தன. அன்று தேனாள் கூறிய கருத்துக்களையும் அசை போட்டுப் பார்த்தாள். பின் தன்னையே கடிந்து கொண்டாள்.

"சீ .. எவ்வளவு வெட்கம் திருமணம் தான் வாழ்க்கை என்று அழிந்து போகும அற்ப ஆசையில் இருந்தேனே இனி பிறநலத்திற்காய் சேவை செய்து மனிதனாக வாழுவேன் வாழ்க்கை என்பது என்ன என்று இந்த சமுதாயத்திற்கு வாழ்ந்து காட்டுவேன்," என்ற உறுதியுடன் வீட்டிற்குள் நுழைந்தவளின் முகத்தின் பிரகாசத்தைப் பார்த்து மீனாம்பாளின் உதடுகள் புன்னகையில் நெளிந்தன.

சத்தியா ஆவலுடன் தாயின் கரங்களை, பற்றி "தைப்பிறக்க வழி பிறக்கும் என்பீர்கள். இந்த தை பிறந்ததும் எனக்கு வாழ வழி பிறந்து விட்டது "என மனம் பொங்கி வழிய அவள் கூறிய வார்த்தைகளால் இரு சோடிகளும் கண்ணீரில் மறைந்தன. அந்த ஆனந்தக் கண்ணீருடன் அன்று தான் அவர்களிற்கு புதுவருடம் பிறக்கிறது.

பகவானின் ஆசியுடன் தாயாரின் அன்பையும் பெற்று சிறகு முளைத்த குருவிபோல் சமுதாயத்தில் ஒருத்தியாய் நுழைந்து கொண்டாள் சத்தியா. இப்போது அவள் வாழத்தெரிந்து கொண்டாள்.

* * *

---

கற்பக விருட்சம் கைவசம் இருக்கையில் வாழை மரத்தைத் தேடியலைவதேன்? காமதேனுப் பசு தம்மிடம இருக்கையில் வேறு இடங்களில் பாலைத் தேடுவதேன்? ஒளி உமிழ்கின்ற மேரு மலை இருக்கையில் பொன்னையும், வெள்ளியையும் நாடியலைவதேன்? பக்தியும் முக்தியும் அளிக்க கடவுள் காத்திருக்க துன்புறுத்தும் ஸம்ஸாரத்தில் வாடியுழல்வதேன்?

- பாபா -

---

**தெய்வம் தந்த சொத்து**

பணம் பெருகப் பெருக மனிதன் மிகக் கேவலமாக நடந்து வருகிறான் அவன் தன் வாழ்க்கையை தெய்வத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும். உன் வாழ்க்கை உன் தந்தை பாட்டன் இவர்கள சம்பாதித்த சொத்து அல்ல. தெய்வம் அளிதத சொத்தே இந்த வாழ்ககை அதை அவருக்கே அர்ப்பணிக்க இயலாவிடில் என்ன பயன்? அன்பை மறந்து போனதால் தான் இவ்வுலகம் இத்தனை துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளது. ஆகவே அன்பை வளர்த்து இதயத்தை விசாலமாக்கிக் கொள்ளுங்கள் இதயம் முழுவதும் அன்பு தானே நிறைந்திருக்கிறது. அதை அனுபவியுங்கள் அடுத்தவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள் எல்லோரையும் அன்பு மயமாக மாற்றுங்கள் இதுவே பூஜையும் வழிபாடும்.

பாபா -

---

இறைவனிடம் திடநம்பிக்கை கொள் எதையும் சாதிக்கலாம். - பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதாவிடம் செல்லும் வழி

சீமோன் பேதுரு யேசுவை நோக்கி ''ஆண்டவரே ! நீர் எங்கே போகிறீர்'' என்றான இயேசு அவனுககு பிரதியுத்தரமாக, நான் போகிற இடத்துக்கு இப்போது நீ என் பின்னே வரக் கூடாது, பின்பாடு என் பின்னே வருவாய் என்றார்.

பேருது அவரை நோக்கி ''ஆண்டவரே நான் இப்போது உமக்கு பின்னே ஏன் வரக் கூடாது ..? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றான்.

யேசு தன் சீடர்களை நோக்கி ..

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு அப்படியில்லாது இருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகின்றேன். உங்களுக்காக ஆயத்தம் பண்ணிய பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள் வழியையும் அறிந்திருக்கிறீர்கள்.

தோமா அவரை நோக்கி... ''ஆண்டவரே நீர் போகிற இடத்தை அறியோமே - வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான். அதற்கு யேசு.

''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாக இருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரமுடியாது. என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். இது முதல் நீங்கள் அவரை அறிந்திருப்பீர்கள் நீங்கள் அவரை அறிந்தும் கண்டும் இருக்கிறீர்கள்.

பிலிப்பு யேசுவை நோக்கி ஆண்டவரே.. பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்.

அதற்கு யேசு பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனேயே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா ? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் அப்படியிருக்க பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய் ? நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா ? நான் உங்களுடன் சொல்கிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரிகைகளைச் செய்து வருகிறார். நான பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள். அப்படியில்லாவிட்டாலும் என் கிரிகைகளின் நிமித்தமாவது என்னை நம்புங்கள்.

## தத்துவம் ஒன்றே

யேசு முதலில் ''நான் இறைவனின் தூதன்'' என்றார். அதன் பின்னர் நான் இறைவனின் மைந்தன் என்றார் இறைவனின் மகன் என்பது இறைவனுடன் அதிக நெருக்கத்தை ! வெளிப்படுத்துகிறது. இது தந்தைக்கும மகனுக்கும் இடையே உள்ள நெருக்கமான உறவைக் குறிப்பிடுகின்றது சாதனை பெருகப் பெருக இயேசு ''நானும் தந்தையும் ஒன்றே'' என அறிவித்தார் அதற்குப் பின்னரே தூய ஆவி வருகிறது.

இத்தத்துவங்கள் எல்லா மதங்களிலும் காணப்படுகிறது. ஹிந்து மதத்தத்துவங்களில இதை த்வைதம் விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்று விளக்குகின்றனர்

பாரசீக சித்தாந்தப்படி நான் ஒளியில உள்ளேன் என்னுள் ஒளி இருக்கிறது. நானும ஒளியும் ஒன்றே என்பதும் இதையே விளக்குகிறது.

- பாபா -

## புத்த பகவானின் பொறுமை

ஒரு நாள் புத்தர் தனிமையில் அமர்ந்திருந்தார் சற்று நேரத்திற்குப் பின் சிலர் அவரைச் சுற்றி அமர்ந்தனர். அவருடைய போதனைகளையும் அவை மக்களிடம் ஏற்படுத்தும் விளைவுகளையும் விரும்பாத ஒருவர் எழுந்து நின்று, காது கொடுத்துக் கேட்கமுடியாத, அசிங்கமான சொற்களை வசை மாரியாகப் பொழிந்தான்.



அவற்றைப் புத்தர் காதில் வாங்காதவர் போல் புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். எனிமேல் திட்டுவதற்கு வார்த்தை இல்லை எனுமளவிற்கு அவனது வாயிலிருந்து சுடு சொற்கள் மீதமில்லாமற் பீறிட்டன. அதிகமாக உழைத்த நாக்கு களைத்து விட்டது புத்தர் சிரித்துக் கொண்டே,

சகோதரா! அவ்வளவு தானா? என்று மட்டும் கேட்டார். அதற்கு அந்த ஆசாமி:

''உனக்குத்தான் கொஞ்சம் கூட வெட்கம் என்பதில்லையே! இந்தப் போடு போட்டுங் கூட உனக்கு உறைக்கவில்லையே! உன்னுடம்பு கெட்டித் தோல் கொண்டது நீ ஒரு மரக் கட்டை'' என்றான்.

'தனக்கு அளிக்கப்படும் வெகுமதி ஒன்றை ஒருவன் ஏற்க மறுத்தால் அந்தப் பொருள் என்னவாகும் என்று புத்தர் அவனைக் கேட்டார் அதற்கு அவன் ''கொடுத்தவனிடமே இருக்கும்'' என்றான்.

''அப்படியா? நல்லது, நீ அளித்த வசவு வார்த்தைகள் எனும் வெகுமதியை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. பதிலுக்கு நான் உன்னைத் திட்டவுமில்லை எனவே அவற்றை நீயே வைத்துக் கொள்'' என்றார் புத்தர்

## புத்த பகவானின் மூன்று எச்சரிக்கைகள்

முதலாவது,

உலகிலே எண்பதோ தொண்ணூறோ நூறோ வயதடைந்த ஒரு கிழவனோ. கிழவியோ, மெலிந்து வளைந்து கீழே குனிந்து கோலூன்றி நின்று, கால்கள் தள்ளாட பலங்குன்றி, பண்டை இளமை கழியப்பெற்று, உடைந்த பற்களோடும், நரைத்த அற்பமான குடுமியோடு, உறுப்புக்கள் செயபுண்ணாகித் திரை விழுந்த நிலையில் இருந்ததை ஒரு நாளும் நீ கண்டதில்லையா...?

நீயும அழிவுக்கு உள்ளாவாய் அதற்குப் தப்ப உனக்கு இயலாது என்ற உண்மை உன்னிடம் ஒரு போதும எழுந்ததில்லையா

இரண்டாவது,

உலகிலே ஓர் ஆணோ பெண்ணோ நோயுற்றும் துன்புற்றும் பிணிமுற்றியும் தன் சொந்த மலத்திலே புரண்டு கொண்டிருக்கும் நிலையில் சிலரால் தூக்கி எடுக்கப்பட்டு பிறரால் கிடத்தப்பட்டதை ஒரு நாளும் நீ கண்டதிலலையா...?

நீயும் நோய்க்கு உள்ளாவாய் தப்ப உனக்கும் இயலாது என்ற நினைவு உன்னிடம் ஒருபோதும் எழுநததில்லையா...?

மூன்றாவது,

உலகிலே ஆணின் பிணமோ பெண்ணின் பிணமோ இறந்து மூன்று நான்கு நாட்களின் பின்னர் ஊதிக் கருநீல நிறம் பெற்று அழுகியிருந்ததை ஒரு நாளும் நீ கண்டதில்லையா...?

நீயும சாவிற்கு உள்ளாவாய் அத்றகுத் தப்ப உனக்கும் இயலாது என்ற நினைவு உன்னிடம் ஒருபோதும் எழுந்ததில்லையா..?

கடவுளிடம் வேண்டுதல் செய்யும்போது போலி பக்தரைப் போல செய்ய வேண்டாம் - யேசு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் 11

சென்ற இதழ் தொடர்ச்சி.....

''நான் எத்தகைய அதிர்ஷ்டசாலி, ஸ்ரீமத் நாராயணன், லக்சுமி தேவி இவர்களின் திருமணத்தை முடித்து வைத்தேன். இனி வேறு எதிலும் அக்கறை இல்லை. வேறு எதுவும் தேவையும் இல்லை. செய்ய வேண்டிய செயலும் இல்லை, இவ்வுடலை நீத்தலே எனது அடுத்த செயல்'' என்றார். இதன் பின் இராமாயணத்தில் வேறு எந்த இடத்திலும் விசுவாமித்திரர் என்ற பெயரே காணப்படவில்லை.

### சுருத கீர்த்தி

இராம இலட்சுமண பரத சத்துருக்னர் தத்தம் மனைவியருடன் பயணம் செய்ய ஆயத்தமாக இருந்தனர். சுருத கீர்த்தி சுப நேரங்களையும், சுப சகுனங்களையும் அறிவாள் செவிமடுப்பதனைத்தும் புரிந்து கொள்ளும் திறன் உடையவள். அத்தகைய புகழ் பெற்றதால், அவளுக்கு சுருதகீர்த்தி என்று பெயர்.

சுருதகீர்த்தி, மாண்டவியிடம், மெதுவாக அக்கா'' இப்போது செல்வது நல்லதல்ல'' மாண்டவி ஊர்மிளையிடம் கூற அவள் சீதையிடம் கூறினாள். சீதை கூறினாள்.

''அசடே, இறைவனே நம்கூட இருக்கும் போது சுபமுகூர்த்தம் நமக்கு எதற்கு; காலமே அவரது வடிவம், காலம் அவர் கைக்குள் அடங்கி உள்ளது. பரமாத்மா கூட இருக்கும போது, முகூர்த்தம் பற்றி கவலையுற வேண்டாம் எவ்வாறு ஏதாவது இடைஞ்சல் ஏற்பட்டாலும் இராமன் கவனித்துக் கொள்வார்.

மிதிலாபுரி வாசிகள் அனைவரும் கண்ணீர் விட்டனர். ஜனகர் மஹாயோகி சிறிதும் பற்றில்லாதவர். எதைப் பற்றியும் அவர் கவலைப்பட்டதில்லை. குமாரத்திகளைப் பிரிய நேர்ந்ததற்கு அவரே கண்ணீர் வடித்தார். இது துன்பக் கண்ணீர் அல்ல. பிரகிருதியும் இயற்கையும் ஒன்றிவணந்ததால ஏற்பட்ட ஆனந்தக் கணணீர்.

### பரசுராமர்

மிதிலை நகரிலிருந்து அவர்கள் கிளம்பினார்கள். பெருத்த சத்தம் கேட்டது. பாதிவழி செல்லும் போது 'நில் நில்' என்று இடிமுழக்கம் போன்ற ஒரு குரல் கேட்டது. தேரிலிருந்து இறங்கியதுமே பரசுராமரைக் கண்டனர்

சிவதனுசை ஒடித்து, அதன் தெய்வீக ஆற்றலுக்கு பங்கம் விளைவித்ததால், சினமுற்ற பரசுராமா இப்போது இராமனுடன் போரிட வந்தார் தெய்வீக ஆற்றலுக்கு அது ஒரு அவமானம் எனறு கருதினார்.

''இராமா, ஆற்றலுடன் நீ ஒடித்த அந்த வில் தூசு படிந்தது. என்னிடம் உள்ள இந்த வில்லை வாங்கி அதை ஒடிக்க உனக்கு ஆற்றல் உண்டா என்று நான் பார்க்கிறேன்'' என்றார்

இராமன் இரு கைகளையும் கூப்பிய வண்ணம், ''பரசுராமா உங்களுடன் போரிட நான் தயாராக இல்லை. உங்களுக்கு சந்தேகம் இருந்தால் கூறுங்கள். நான் விளக்கம் கூறுகிறேன்''

பரசுராமர் வில்லை கீழே எறிந்தார். இராமன் அவ் வில்லை எடுத்து நாணேற்ற அது முறிந்தது உடனே பரசுராமர் இராமன் பாதங்களில் வீழ்ந்தார். இதன் உட்பொருள் என்ன?

### உட்பொருள்

இறைவனுக்கு பதினாறு கலைகள் உண்டு. அவற்றில் பன்னிரண்டு கலைகள் பெற்றவர் ஸ்ரீராமர், பரத, இலட்சும, சத்ருக்னனுக்கு மூன்று கலைகள் உள்ளன. பரசுராமனிடம் ஒரு கலை மிஞ்சியிருந்தது. அந்தக் கலையை இராமனிடம் அளிப்பதற்காக, பரசுராமன் இத்தகைய ஆர்ப்பாட்டம் செய்தார், அதை அளிப்பதற்காகவே அவர் இராமனிடம் வந்தார்.

இராமாயணத்தை எழுதுபவர்களும், படிப்பவர்களும், கேட்பவர்களும் இராமனுடன் சண்டையிடவே பரசுராமன் வந்ததாக நினைக்கின்றனர். அது சரியல்ல. தன்னிடம் உள்ளவற்றை வழங்கவே அவர் இராமனிடம வந்தார். இராமன் இப்போது பதினாறு கலைகளுடன் பரிபூரணமாகத் திகழ்ந்தார்.

அனைவரும் அயோத்திக்கு வந்து சேர்ந்தனர். அயோத்தி மக்கள் இவர்களை வரவேற்பதற்கு கணக்கற்ற வகைகளில் நகரை அலங்கரித்து. கொண்டாடத் தயாராக இருந்தார்கள்.

### திருவிழாக் கோலம்

பத்து நாட்கள் எப்புறத்திலும் திருவிழாக்கோலமே காணப்பட்டது. எல்லா மக்களும் கூட்டங் கூட்டமாக வந்து மரியாதை செலுத்தினர். இறைவனது கரங்கள் என்றும் வழங்குமே தவிர வாங்குவதில்லை ஆக எப்போதும் அவர் கரங்கள் உயர்ந்தே இருக்கும்.

ஒரே ஒரு காரணத்துக்காக இறைவன் கரங்கள் நீள்வதுண்டு. அதுவே பிரேமை இறைவன் எப்போதும் சத்யம், தர்மம் இவற்றின் வழியாகத்தான் செல்கிறார். தெய்வத்துவத்தை நிரூபிக்க சத்யமும். தர்மமும் தேவை. சத்தியம் உள்ள இடத்தில் தான் கடவுள் இருக்கிறார். தர்மம் உள்ள இடத்தில்தான் இறைவன் இருக்கிறார். சத்தியமும், தர்மமும், இல்லாதபோது அங்கு இறைவன் இருப்பதில்லை. அரக்கன் தான் இருக்கிறான். சத்தியத்தையும், தர்மத்தையும், கடைப்பிடிக்க வேண்டுமெனில் நாம் கடவுளைச் சரணடைய வேண்டும்.

நாட்கள் பல கழிந்தன. பரதனும் சத்துருக்னனும் அவாகளது தாய் மாமனால் கேகய நாட்டில் சில காலம் கழிக்கும்படி அழைக்கப்பட்டனர். கேகய நாட்டிற்கு அவர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர். பன்னிரண்டு ஆண்டுகள் இராமனும் இலட்சுமணனும் தசரதனுடன் கூடவே இருந்து அரசாங்க நிர்வாகம் மற்ற விவகாரங்களின் நுட்பங்களைக் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் தசரதனுக்கு எந்த விதமான இடைஞ்சல்களையும் அளிககவில்லை இராமன் அரசனுக்குரிய எல்லாக் கடமைகளையும் ஆற்றி வந்தான்.

### முடி சூட்டத் தீர்மானம்

ஒரு நாள் இரவு தசரதன் தூங்கிக் கொண்டிருந்தார் அவருக்குத்தாகம் எடுத்தது நீர்க்குடுவையிலிருந்து குவளையில் நீர் எடுக்க முயற்சி செய்தார். அப்போது அவரது கை நடுங்கியது அதன் பிறகு அரசன் தூங்கவில்லை.

எனக்கு அரசாளும் அதிகாரம் இனி இல்லை- என் உடலின் மேலேயே எனக்கு ஆதிக்கம் இல்லை. இனிமேல் எவ்வாறு அரசு புரிவது? என்று நினைத்து வசிஷ்டரை அழைத்து வர வேண்டுகோள் விடுத்தார். அடுத்த நாள் காலையில் இராமனுக்கு முடி சூட்ட வேண்டும் என்று தீர்மானித்தார்.

ஆனால் இக்கால நிலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். எழுத இயலாத நிலை, காது சரியாக கேட்காத நிலை, பார்வை மங்கிய நிலை, உடல் ஊனமுற்ற நிலை வண்டியில் தூக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டாலும் பதவியை விடுவதில்லை. இப்படியாக மனிதன் இருப்பதாலும் தன் புலன்கள் மேலும் ஆதிக்கம் இல்லாது இருப்பதால் தான் நாடு இந் நிலைக்கு உள்ளாகியது

தசரதன் பதவியை விட்டு விலகத் தீர்மானித்தான். இனியும் அரசு புரிய அவருக்கு விருப்பமில்லை. அக்கால அரசர்கள் எவ்வாறு தர்மத்தை விட்டு வழுவாது இருந்தனர் என்பதையும் தர்ம உணர்வுடன் இருந்தார்கள் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

மறுநாள் காலையில் தசரதன் எல்லோரையும் கலந்து ஆலோசித்தான். வசிஷ்டர் ''பரத சத்ருக்னனிடம் கூற வேண்டுமல்லவா'' என்றார்.

தொடரும்

நிராசையாளனே உலகில் நிறைவான செல்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அன்புக் கண்ணன்

குயிலே குயிலே கூவாதே
கொஞ்சும் கண்ணன் ஆடுகிறான்
காக்கா காக்கா கரையாதே
அழகுக் கண்ணன் விளையாடுகிறான்
கிளியே கிளியே கதையாதே
அன்புக் கண்ணன் பாடுகிறான்
கோழி கோழி கொக்கரிக்காதே
குழந்தைக் கண்ணன் சாப்பிடுகிறான்
மயிலே மயிலே அகவாதே
மாயக் கண்ணன் தூங்குகிறான்

மிருஜா குலேந்திரன்
ஆண்டு 8
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி

* * *

## இறை தூதன் நீடு வாழ்க

இறை தூதன் நீடு வாழ்க
ஆல் போல் தழைத்து வாழ்ந்திடுவாய்

கல்வி முயற்சி பெருவாழ்வு
காத்து நெடிது வாழ்ந்திடுவாய்
பல்லோர் போற்று நற்பணியை
பண்பாய் செய்து வாழ்ந்திடுவாய்

சிறுவர்க் கேற்ற இலக்கியமாய்
மாத முரசாய் வெளி வருவாய்
பெறுவதற்கரிய பேறெனவே
பேணி உன்னைப் போற்றிடுவேன்

அழகு சித்திர அட்டையுடன்
அறிவுச் செல்வமென வருவாயே
மழலை சிறுவன் தங்கட்கு
மாண்பு தந்து வாழ்ந்திடுவாய்

ப. திருக்குமரன்
ஆண்டு - 10B
யாழ் இந்துக் கல்லூரி

* * *

## என்னிடமிருந்து தப்ப முடியாது

**பகவான் பாபா**

பிள்ளைகளே ..!

நீங்கள் எங்கே போனாலும் என்னையே சந்திக்கிறீர்கள் எங்கும் இருப்பவன் நான் பூமாதேவியிடமிருந்து நான்கு ரூபா கடன் வாங்கிய முயலின் கதையை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தான் புதிய பகுதிக்குச் சென்று விட்டால் தொந்தரவுகளிலிருந்து விடுபட்டு நிம்மதியாக இருக்கலாம் என அது நினைத்தது

எனவே தான் கடன் வாங்கிய இடத்திலிருந்து வெகு தூரத்திலுள்ள இடத்திடற்கு எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ? அவ்வளவு வேகத்துடன் ஓடியது. கடைசியில் பெரிய நிம்மதியுடன் கீழே உட்கார்ந்து தனக்குள்,

''இப்போது அதைத் திருப்பிக் கொடுக்கும்படி யாரும் என்னிடம் கேட்க முடியாது'' என்று சொல்லிக் கொண்டது.

அப்போது அது ஆச்சரியப்படத்தக்க அளவிற்கு தன்னுடைய காலடியிலிருந்து ஒரு குரல், ''பூமாதேவியாகிய நான் இதோ உன் காலுக்குக் கீழேயே இருக்கிறேன் எத்தனை தூரம் ஓடினாலும் நீ என்னிடமிருந்து தப்ப முடியாது'' எனக் கூறியது, முயலின் காதில் விழுந்தது

அதைப் போலவே நீங்களும் என்னிடமிருந்து ஓட முடியாது. புகலிடம் தேடி நீங்கள் எங்கே போனாலும் நான் உங்களிடம் வேண்டுவதெல்லாம் நல்ல நடத்தை, நல்ல பழக்கம் நல்ல சிந்தனை, நல்ல நட்பு என்பவைகளே'

## பாட்டி சொன்ன கதை

அன்று சித்திரா பௌர்ணமி நிலவு பால் போலக் குளிர்ந்தது எங்கள் பாட்டி முற்றத்தில் கால்களை நீட்டி அமர்ந்திருந்தார். நானும் தம்பியும் அவர்களை சூழ்ந்திருந்தோம் ''பாட்டி கதை சொல்லு'' என ஆவலோடு கேட்டோம் அப்பொழுது அவர் சொன்ன கதை இது,

குடியானவன் ஒருவனுக்கு 4 ஆண்பிள்ளைகள் அவர்கள் பெரும் சோம்பேறிகள் தந்தையின் சொல் கேட்பதில்லை, குடியானவன் எந்த வேலையைச் சொன்னாலும் செய்ய மாட்டார்கள்.

''இவர்களை எப்படித் திருத்தலாம்'' என்று குடியானவன் தலையைப் போட்டு உடைத்தான். கடைசியில் அவனுக்கு ஒரு தந்திரம் புலப்பட்டது. அவன் தன் பிள்ளைகளை அழைத்தான்.

பிள்ளைகளே எங்கள் தோட்டத்தில் பெரிய புதையல் ஒன்று இருக்கிறது என அறிந்தேன். நீங்கள் தோட்டத்தை கொத்திப் பாருங்கள். யாருக்கு அந்தப் புதையல் கிடைக்கிறதோ அவன் அதை எடுத்துக் கொள்ளட்டும்.

மக்கள் நால்வரும் சோம்பலை உதறி எறிந்தார்கள். மண்வெட்டிகளுடன் தோட்டத்திற்குச் சென்றார்கள். வெய்யில், வெப்பம், களைப்பு என்பவற்றை மறந்து கொத்திக் கொண்டே இருந்தார்கள்.

ஒருவாறு தோட்டம் முழுவதும் கொத்தி முடிந்தது. புதையல் தான் கிடைக்கவில்லை, அவர்கள் ஏமாற்றத்துடன் தலை குனிந்து நின்ற போது தந்தை சொன்னார்

சோம்பல் பறந்து போய் விட்டது பார்த்தீர்களா? உங்கள் புதையல் இந்தத் தோட்டத்தில் தான் இருக்கிறது இதில் பாடுபட்டு உழைத்தால் செல்வம் என்றார். பிள்ளைகள் தங்கள் பிழைகளை உணர்ந்தார்கள். அன்றிலிருந்து சோம்பலை விட்டு அயராது உழைத்து முன்னேறினர்.

சுயிதா, இராமச்சந்திரன்
ஆண்டு 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மை செய்யுங்கள் அல்லாவின் அருள் கிடைக்கும்

மனிதர்களே..! நீங்கள் நன்மை செய்யுங்கள். அல்லா நன்மை செய்கிறவர்களை மிகவும் விரும்புகிறார்கள். நிச்சயமாக நன்மை செய்கிறவர்களுக்கு அல்லாவின் அருள் நெருக்கமாக இருக்கிறது.

நன்மை செய்கிறவர்களின் கூலி நன்மையாகவே இருக்குமேயன்றி வேறு எப்படியும் இருகக மாட்டாதுஎன்று அல்லா கூறுகின்றார்.

எனவே இறைவன் ஒருவன் அவன் ஏகன் தனித்தவன். சர்வ வல்லமை 'உள்ளவன், எம்மை ஆட்சி செய்பவன் துன்பத்தைத் தருபவனும் அதனை விலக்குபவனும் அவனே என்ற உண்மையுடன் யார் உலகில் வாழ்கிறார்களோ அவனுக்கு அல்லா சுவர்க்கத்தைக் கூலியாகக் கொடுக்கிறார்

மேலும் ஒரு வசனத்திலே ''உலகத்திலே யார் ஒரு நனமை செய்கிறார்களோ அவர்களுககு அல்லா பத்துமடங்குநன்மைகளை வழங்குகிறார்' என்று திரு மறையிலே அல்லா கூறுகிறார்

அன்புக்குரியவர்களே... !

நன்மை என்றால் என்ன ? இதனையும் நாம் அறியவேண்டியவர்களாக இருக்கறோம. சிலர் மார்க்கத்தின் ஒரு பகுதியை மட்டும நன்மை என்று புரிந்து வைத்திருக்கிறார்கள். நல்ல முறையில் தெளிவு பெற வேண்டிய உண்மை என்னவென்றால்,

## ஒருவர் செய்ய வேண்டிய நன்மைகள்

ஒருவன் நல்ல காரியங்களை முதலில் செய்ய வேண்டும்

மற்றவர்களையும் நல்ல காரியங்களைச் செய்யுங்கள் எனத் தூண்ட வேண்டும்.

அடுத்து தீயவைகளை அவன் தவிர்த்து கொளள வேண்டும் மற்றவர்கள் மூலமாகவும் தீமைகளைத் தடுக்க வேண்டும். இந்த நானகு தான் ஒருவர் செய்ய வேண்டிய நன்மைகள்.

எனவே தொழுகை நோனபு பிடிப்பது 'ஹச்செய்வது அல்குரானை ஓதுவது இப்படியான காரியங்களை செய்வது மாத்திரம் நன்மையான காரியமல்ல இவைகளை மற்றவர்களும் செய்யத் தூண்ட வேண்டும். நாம் மாத்திரம் செய்து கொண்டு இருப்பது நல்லதல்ல.

எமது மனைவி, மக்கள் எமது குடும்பத்தினர்கள் எல்லாருக்கும் இந்த நன்மை செய்யும் முறையைத தூண்டி அவர்களையும் நன்மையின் பக்கம் அழைக்க வேணடும்.

எனவே இந்த நான்கு அம்சங்களும் ஒழுங்காகச் செய்யப்படும் போது தான் இவன் நன்மை செய்பவனாகக் கருதப்படுகிறான.

## எந்த அளவில் நன்மை

எந்த அளவுக்கு மனிதர்கள் நன்மை செய்ய வேண்டும் என்று நபி அவர்கள் குறிப்பிட்டார்கள் என்றால,

நிச்சயமாக அல்லா எல்லா விவகாரங்களிலும் நல்ல முறையில் நடந்து கொள்வதைக் கடமையாக்கி வைக்கிறான்.

எனவே ஒரு மனிதன் இஸ்லாத்தின் ஒரு பகுதியை மாத்திரம் விளங்கிக் கொண்டு மக்களிடையே தான் சிறந்தவர் என்று காட்டுவதற்காக ஒரு சில நன்மைகளைச் செய்து விட்டு தனது வாழ்க்கையிலே மோசடியைச் செய்வாரானால் மற்றவர்களை நன்மையின் பக்கம் அழைக்கவில்லையானால் அவன் நன்மை செய்தவனாக மதிக்கப்பட மாட்டான் என்பது தான் நாம் இங்கு தெளிவு பெற வேண்டிய உண்மையாகும்.

ஆதாரம் இலங்கை வானொலி

---

2ம் பக்கத் தொடர்ச்சி.

## நாம் கடவுளுடன் .......

அவதாரபுருஷரும் கடவுளுமான பாபாவின் நேரடி உபதேச வழிகாட்டலின் கீழ் நாம வாழும் புண்ணியம் செய்தவர்கள். அவற்றை வீண் அடிக்காது நற்செயல்கள் சேவைகளைச் செய்து அவருடைய பூரண அனபுக்கு பாத்திரமாகவேண்டும்.

## உணவு தந்த தேவதைகள்

டாக்டர் திரு ஜோன் ஹிஸ்லொப் இவர் அமெரிக்க நாட்டவர். திரு. கிருஷ்ணமூர்த்தியைப் போல பாபாவின் பக்தர் ஒருமுறை பகவானை தரிசிக்க புட்டபர்த்தி வருகிறார். 'ஹிஸ்லொப்'

பாபா தான் வெளியூர் பிரயாணம் செய்யும் போது தனபக்தர்களையும் அழைத்துக் கொண்டு போவது வழக்கம அதுபோல அன்றும் ஜோன் ஹிஸ்லொப்பை அழைத்து பாபா சொன்னார்.

''வெளியூர் போவதக்கான ஆயத்தங்கள செய். கூடவே நீயும் வருவாய் ஐந்துபேருக்குரிய உணவையும் எடுத்துவரவும்'' என்று பணித்தார்.

ஆனால் எல்லோரும் காரில் ஏறுமபோது பத்துப் பேராக ஏறினார்கள். இடையில் சாப்பாட்டிற்காக கார் நிறுத்தப்பட்டது. பாபா ஹிஸ்லொப்பை நோக்கி ஹிஸ்லொப் ! எல்லோருக்கும் உணவு ரெடியா? என்று கேட்டார்.

ஹிஸ்லொப் தயங்கியபடி ''ஸ்வாமி ! ஆரம்பத்தில் ஐந்துபேர்தான் வருவதாகச் சொன்னீர்கள் எனவே ஐந்து பேருக்குரிய உணவுதான் எடுத்து வந்தோம. மிகுதிப்பேருக்கு என்ன செய்வது' எனக் கேட்டார்.

உடனே பாபா கார்டிக்கியினுள் உணவு இருக்கிறது எடுத்துவா என்றார். ஸ்வாமி ! கார் டிக்கியில் உணவு இல்லை ஸ்வாமி என்றார் நீ. திறந்து பார் ! என மீண்டும் பணித்தார் பாபா

மறுபேச்சில்லாமல் கார் டிக்கியைத் திறந்தார் என்ன அதிசயம் ! இரண்டு அழகிய தேவதைகள் கையில் உணவு பாத்திரத்தை ஏந்தியபடி அவரிடம் கொடுத்தார்கள்.

டாக்டர் ஹிஸ்லொப் உணவுப் பாத்திரத்தை வேண்டிக் கொண்டு பாபாவிடம் தான் கண்ட அதிசயத்தை விவரித்தார். பாபா சொன்னார்.

இது போன்ற ஏவல் தேவதைகள் என்னைச் சுற்றி இருக்கிறார்கள். நான் சொன்னவுடன் அந்தவேலையைச் செய்வார்கள் உன்கண்களுக்கு இது இன்று தெரிந்தது. அவ்வளவுதான் என்றார்

பார்த்தீர்களா — நாம் கடவுளுடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் அவர் சேவைகளில் முழுமையாக பங்கேற்போம். அதன் மூலம் கடவுளின் அருள் ஆசியையும் பெறுவோம்.

* * *

## நன்மை செய்யாத இரக்கமற்ற பெண்ணின் கதி

### - ரஷ்ய தேசக்கதை -

இரக்கமற்ற பெண் ஒருத்தி சாவுக்கு பிறகு நரகம் சென்றாள். அங்குள்ள காவல் தேவதையிடம் என்னை சொர்க்கத்துக்கு செல்ல அனுமதிகக வேண்டும். என்று கேட்டுக் கொண்டாள்.

காவல் தேவதை அவள் எப்பேரதாவது யாருக்காவது நல்லது செய்திருக்கிறாளா என்று கேட்டது அதற்கு அவள்,

''பாத்தியில் இருந்து வெங்காயம் பிடுங்கி பிச்சைக்காரன் ஒருவனுக்கு தானம் கொடுத்திருக்கிறேன்'' என்றாள்,

இது ஒன்று போதும் உன்னை சொர்க்கத்துக்கு அனுப்ப என்று சொனன காவல் தேவதை கடவுளிடம் போய் அந்தப் பெண்ணை சுவர்க்கத்துக்கு அனுப்பும்படி மன்றாடியது.

அவள் பிச்சைபோட்ட அந்த வெங்காயத்தைத் தேடி எடுத்து வரும்படி சொன்னார். கடவுள்.

அந்தக் காவல் தேவதை எப்படியோ தண்டுடன் கட்டிய வெங்காயத்தை தேடி எடுத்து வந்தது.

அந்த வெங்காயத்தை அவள் வீழ்ந்து கிடக்கும் நரகக்குழியில் விட்டு அந்தப் பெண்ணைத் தூக்குங்கள் வெங்காய தண்டைப்பற்றி மேலே வர அவளால் முடிந்தால் சுவர்க்கத்துக்கு வரட்டும் என்றார் கடவுள்

தேவதை அந்த வெங்காயத் தண்டை நரகத்துக்குள் விட்டு தண்டைப்பற்றிய படிமேலே ஏறி வா என்றது.

இரக்கமற்ற அந்தப் பெண் வெங்காயத்தைப் பற்றி மேலே ஏறத் தொடங்கினாள். இதைக் கண்ட அவளுடன் இருந்த மற்ற ஆவிகள் தாங்களும் வருவதாக அவள் காலைப்பிடித்துக் கொணடு ஏறத் தொடங்கினர்.

கோபம் கொண்ட பெண் இது என் வெங்காயம் நான் மட்டும் தான் மேல் ஏறுவேன் என்று சொல்லி காலை உதறினாள். அவ்வளவு தான்,

பிடித்து இருந்த வெங்காயமும் அவளுடன் சேர்ந்து நரகத்தில் வீழ்ந்தது.

---

தெய்வத்திடம் பக்தி இருந்தால் பாவச் செயலில் ஈடுபட துணிவு வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இறைதூதன்" சர்வமத மாத வெளியீடு

### சிறுகதை, கவிதைப் போட்டிகள்

இறைதூதன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட ஒரு வருட ஆண்டு நிறைவை (05 - 04 - 1999) முன்னிட்டு இரு பிரிவுகளாக நடாத்தப்படும் **சிறுகதை, கவிதைப் போட்டிகள்.**

முதலாவது பிரிவு:- 8 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்டோர்.
**இரண்டாவது பிரிவு:-** 16 வயதிலிருந்து 35 வயதுக்குட்பட்டோர்.

மனித மேம்பாட்டுக் குணங்களான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை, இவற்றை உள்ளடக்கியதாக உங்கள் கதைகளும் கவிதைகளும் எழுதப்பட வேண்டும்.

---

**"இறைதூதன்" சர்வமத வெளியீடு**
**கதை, கவிதை போட்டிக் கூப்பன்**

கதை / கவிதையின் பெயர்: ..............................
எழுதியவர் பெயர்: ..............................
புனை பெயர் (இருந்தால்): ..............................
வயது: ..............................
முகவரி: ..............................
..............................
..............................
திகதி: ..............................
கையொப்பம்: ..............................
மாணவராயின் பெற்றோர் அல்லது வகுப்பாசிரியர் கையொப்பம்: ..............................
பாடசாலையின் பெயர்: ..............................

---

### போட்டி விதிமுறைகள்

1. கதைகள், கவிதைகள் "வெள்ளைத்" தாளில் தெளிவான கையெழுத்தில் ஒரு பக்கம் மாத்திரம் எழுதபபட வேண்டும்.
2. சிறுகதைகள் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும், கவிதைகள், 20 வரிகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
3. நாட்டின் எப்பாகத்திலுமுள்ள எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் பங்குபற்றலாம்.
4. ஆக்கங்கள் நேரிலோ சாதாரண தபால் மூலமோ அனுப்பலாம.
5. கதைகள், கவிதைகள் சொந்தக் கற்பனையில் உதித்தவையாக இருக்க வேண்டும். வேறு பத்திரிகைகளில் வெளிவந்ததாகவோ வேறு போட்டிக்கு அனுப்பியதாகவோ இருக்கக் கூடாது.
6. இங்கு வெளியாகியுள்ள கூப்பனை மாதிரி நீங்களே ஒன்றைத் தயாரித்து உங்கள் ஆக்கங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
7. தகுந்த பரிசுகள் வழங்கப்படவுள்ளது.
8. அனுப்பும் கடித உறையின் மேற்பக்கத்தில் "சிறுகதை கவிதைப்போட்டி" க்கான சிறுகதை அல்லது கவிதை எனக்குறிப்பிடவும்.

**போட்டி முடிவு திகதி**
**28- 02 - 1999**

அனுப்ப வேண்டிய முகவரி
**ஆசிரியர் இறைதூதன்**
**மானிப்பாய் சத்ய சாயி நிலையம்**
**ஹலக்லேன், மானிப்பாய்.**



# நீங்களும் கேட்கலாம்

**பக்தர்.-** சுவாமி! பொதுவாக எல்லோராலும் இறைவனி--த்தில் பக்தி செலுத்த முடிவதில்லையே இதற்கு காரணம் என்ன?

**சுவாமி:-** காரணம் என்ன இருக்கிறது! எல்லாம் உலகியல் விஷயங்களில் பற்றுதல்தான் சம்சார பந்தங்களால ஏற்படும் அர்த்தமற்ற, அளவில்லாத தகுதிக்கு மீறிய ஆசைகள் இவையே காரணம். இதற்கு மேல் ஒன்றுமில்லை.

குழந்தைகள் விளையாடும் ''சீ-சா'' விளையாட்டு தெரிந்திருக்குமே! பலகையில் ஒரு முனையில் அழுத்தம் அதிகரிக்கும் போது, மறுமுனை மேலெழும்பிவிடும். அதுபோல் உலகியல் ஆசை என்ற அழுத்தம் அதிகரித்தால் கடவுள பக்தி குறைந்துவிடும். ஆசைகளின் அழுத்தம் குறையும் போது மட்டுமே கடவுள் பகதி அதிகரிக்கும் இது துலாக் கோல் போன்றது உலக விஷயங்களில் ஆசை அதிகம் உள்ள நிலையில் பக்தி எப்படி வரும்?

தெய்வப்ரீதி அதிகரித்தால் ஆசைகள் மறைந்து விடும் சம்சாரம் உன்னை ஆக்கிரமித்துக் கொண்டு இருப்பதால் தான் பகதி உனக்கு நெருங்க முடியாத தூரத்தில் இருப்பது போல தோன்றுகின்றது.

(உ-ம்) காந்தம் இரும்புத்துகள்களை ஈர்க்கும் சில சந்தர்ப்பங்களில் காந்தம் இரும்புத்துகள்களை ஈர்ககாது. ஏன? இரும்புத்துகள்கள் துருப்பிடித்து இருப்பதால்தான்! 'ஜீவன்' என்று இரும்புத்துகள்களிற்கு 'ஆசை'' என்ற துருப்பிடிப்பதால்தான் 'கடவுள்' என்ற காந்தத்துடன் ஒட்டுவதில்லை. பழுது காந்தத்தில் இல்லை! இரும்புத்துகள்கள் தான் துருப்பிடிக்காமல் நன்றாக இருக்க வேண்டும். இது போல் தான் பக்தியும்!

**பக்தர்:-** எவ்வளவு காலமாகவோ தெய்வப்ரீதிக்கும் பாடுபடுகிறோம்! இரும்பினும் பயனில்லையே! என்ன செய்தால் இறைநாட்டம் ஏற்படும்.

**சுவாமி -** இங்கு எவ்வளவு காலம் என்பது முக்கியமல்ல! இரும்புக்குண்டை தண்ணீரில் போட்டால் எவ்வளவு காலமானாலும் அப்படியேதான் இருக்கும் அணுகுமுறை சரியாக வேண்டும்.

(உதாரணம்) தீபாராதனை செய்கிறீர்கள் அகல் விளக்கும் அதிலுள்ள திரியும் உங்களுக்குத் தெரியும். அந்த திரியில் தண்ணீர் இருந்தால் என்ன பயன்? விளக்கு ஏற்ற முடியாது. ஈரத்துடன் எவ்வளவு காலம் இருப்பினும் பயன் இல்லை

தீபம் ஏற்ற வேண்டும் என்றால் முதலில் என்ன செய்ய வேணடும்? ஈரமுள்ள விளக்குத்திரியை முதலில் வெயிலில் காயவைக்க வேண்டும் பிறகுதான் தீக்குச்சியால் ஒளியேற்ற வேண்டும்,

இங்கு 'காயவைப்பது' என்பது ''வைராக்கியம்'' ஆகும் தீக்குச்சியை உரசி தீ உண்டாக்குவதுதான் 'சாதனை' அதில் உண்டாகும் ஒளியே 'தெய்வ சிந்தனை' அல்லது பக்தி' வைராக்கியம் இல்லை என்றால் ஏதும் வராது ஒன்றும் நிற்காது. இதன் காரணமாக அநேகருக்கு கடவுள் அருள் கிடைப்பதில்லை வைராக்கியமே பிரதானமாகும்

**பக்தர்:-** இறைவனது அருள் கிடைக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**சுவாமி:-** இறைவனின் இதயத்தை நெகிழச் செய்து நெக்குருகச் செய்து நெக்குருகச் செய்யும் சக்து பக்தி ஒன்றேதான். இறைவன் உன் செல்வத்தையோ, கல்வித்திறனையோ பலத்தையோ மதிப்பதில்லை உன் பக்தி மட்டுமே இறைவனை ஈர்க்க வல்லது.

தியாகராஜ சுவாமிகளின் டகழிற்கு பக்தியே காரணம் ராமதாஸ், சூரதாஸ், துளசிதாஸ், மீரா எல்லோரும் இவ்வாறே இறைவனைத் தம வயப்படுத்தி நெகிழச் செய்து நெக்குருகச் செய்து இறையருள் பெற்று முக்தி அடைந்த பகதர்கள் ஆவார்கள். பக்தியால் உனக்கு இறையருள் கிடைப்பது மட்டுமின்றி அந்த இறைவன் மேல் உனக்கு உரிமையும் கிடைக்கிறது.

இப்பத்திரிகை மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தினால் கே. கே. எஸ். வீதி, பூநாறிமரத்தடி, ஸ்ரீ சாயி அச்சகததில அச்சிடப்பெற்று 08 - 02 - 1999 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org